**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

**O.S. No. 64/2021**

2024 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18 - ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி .A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் கூறப்பட்டு உறுதிகூறப்படுகிறது.

**நாள் 18.08.2024**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சித்ரா | ஜாதி | : |
| த/பெயர் | : பாலசுப்ரமணியன் | மதம் | : |
| கிராமம் | : | தொழில் | : |
| வட்டம் | : | வயது | : |

**வா.சா.1 முன்னிலை சத்திய பிரமாணத்தின் பேரில்** குறுக்கு விசாரணை

பிரதிவாதி என்னுடைய தாய் மாமன் ஆவார். எனது கணவரும் எனது தாய் மாமன் ஆவார். எனது பெற்றோர் சிதம்பரம் ஆகும். இந்த வழக்கு சொத்து தொடர்பாக இதே புல எண், நான்கெல்லை, விஸ்தீரணங்கள் தொடர்பாக மன்னார்குடி சார்பு நீதிமன்றத்தில் என்னால் வேறு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கில் பிரதிவாதி மற்றும் அவரது மகன்களை தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்து இரண்டு ஆண்டுகள் கழித்து சார்பு நீதிமன்றத்தில் அந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.

இந்த வழக்கில் பிரதிவாதியின் மகன்களான ரெகுநாதன், மணிகண்டன் இருவரையும் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எனது 2003 ஆம் வருடம் இறந்து விட்டார். அவர் இறப்பதற்கு முன்னதாக குவைத் நாட்டில் வேலை செய்தார் என்றாலும், அங்கு இறந்த பிறகுதான் அவரது உடல் இங்கு கொண்டு வரப்பட்டது என்றாலும் சரிதான். எனக்கு 1990 ல் திருமணம் நடைப்பெற்றது.

தாவா சொத்து எவ்வாறு கிடைத்தது என்றால், எனது மாமனாருக்கு சொந்தமாக இருந்து பிறகு எனது கணவருக்கு கிடைத்ததன் அடிப்படையில் எனக்கு

சொந்தமானது ஆகும். என்னால் தாக்கல் செய்யப்பட்டுகுறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணங்களில் எனது மாமனார் பெயரோ, எனது கணவர் பெயரோ குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எனது மாமனாரின் பெயரில் ஆவணத்தின் நகல்களை தாக்கல் செய்துள்ளேன். எனது வழக்குரையிலும், நிரூபண வாக்குமூலத்திலும் தாவா சொத்திற்குண்டான பட்டா எனது மாமனார் பெயரில் இருந்தது குறித்து என்னால் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். கடந்த 2015 ஆம் ஆண்டு வரை தாவா சொத்து சம்மந்தப்பட்ட வருவாய் ஆவணங்கள் அனைத்தும் பிரதிவாதி பெயரில் இருந்தது என்றால் சரியல்ல. என்னுடைய பெயரில்தான் இருந்தது. பிரதவிாதியின் பெயரில் வருவாய் ஆவணங்கள் இருந்ததால் எனது பெயரையும் சேர்த்து கூட்டு பட்டாவாக சேர்த்து வழங்கும்படி என்னால் மனு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது பெயரையும் சேர்த்து கூட்டு பட்டாவாக இருந்ததை நீக்கம் செய்யக்கோரி வருவாய் கோட்டாட்சியரிடம் பிரதிவாதியால் மனு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த மனுவை விசாரணை செய்து பிரதிவாதிக்கு ஆதரவாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். வருவாய் கோட்டாட்சியர் விசாரணையின் போது எனது தரப்பில் ஆவணங்கள் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்து எனக்கு எவ்வாறு கிடைத்தது குறித்தும் அவரிடம் சொன்னேன்.

வருவாய் கோட்டாட்சியர் உத்தரவு எதிராக மாவட்ட வருவாய் அலுவலரிடம் என்னால் மனு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் மற்றும் பிற சொத்துக்கள் தொடர்பாக 20 வருடங்களுக்கு முன்பாக எனது கணவர் இருக்கும்போது சமாதானம் பேசப்பட்டது. அந்த சமாதானத்திற்கு பிரதிவாதி உடன்படவில்லை. திருக்களார் ஊரில் உள்ள சொத்துக்கள் மாமனாருக்கு சொந்தமானது ஆகும். அங்கு எனது கணவரும், பிரதிவாதியும் வீடு கட்டியிருந்தோம். அந்த கிராமத்தில் உள்ள 20 குழி அவர்களுக்கு வேண்டுமென்று கேட்டதால் 10 குழி விட்டுக்கொடுத்தோம். எனது கணவருக்கும், பிரதிவாதிக்கும் சேர்த்துதான் சாமதானம் பேசப்பட்டு பங்கு பிரிக்கப்பட்டது. கடந்த 1995 வெள்ளம் வந்ததற்கு பிறகு எனது வீட்டிற்கு பக்கத்தில் பிரதிவாதி ஒரு கூரை வீட்டை கட்டினார்.

மேற்கண்ட சங்கதிகள் அனைத்தும் பொய்யானது என்றால் சரியல்ல. என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையில் சொத்து விபரத்தில் ஆறு,

வாய்க்கால் போன்றவை இருப்பதாக சொல்லப்படவில்லை என்றாலும் 1995 ல் வெள்ளம் வந்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது கணவர் அவர் கட்டிய வீட்டிலும், பிரதிவாதிகள் தனியாகவும் வசித்து வந்தார்கள் என்றுதான் கூறி வருகிறேன். வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானவை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தாவா சொத்தை பொறுத்து அவரது மகன்களுக்கு செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்திக்கொடுத்தார் என்றால் சரிதான். இந்த ஆவணம் வழக்கு நிலுவையில் உள்ள போது ஏற்படுத்தப்பட்டதாகும். பிரதிவாதி 09.04.2021 ல் செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். நான் 06.08.2021 ல் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் செட்டில்மெண்ட் ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

பிரதிவாதி எதிர் வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் எனக்கு தெரியும் என்றாலும், வழக்கிற்காக தெரியாது என பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது மகனுக்கும், பிரதிவாதிக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டு 13.03.2021 ல் குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கில் எனது மகன், பிரதிவாதியை தாக்கியதால் அவரது கண் பாதிக்கப்பட்டது என்றால் சரியல்ல. அந்த குற்ற வழக்கு முடிவடையாமல் நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். அதற்கு பிறகுதான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது மகன் மீது போடபட்ட குற்ற வழக்கிலிருந்து அவரை காப்பாற்றவேண்டும் என்பதற்காக பொய்யான சங்கதிகளை கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 முதல் 3 வரையுள்ள ஆவணங்கள் என்னால் மோசடியாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. கடந்த 10 நாட்களுக்கு முன்பாக பிரதிவாதி தாவா சொத்தில் இருந்த சிறிய வீட்டை இடித்து புது வீடு கட்டி குடி புகுந்துள்ளார். நான் சொல்வதுபோல 1990 ல் பாகப்பிரிவினை எதுவும் ஏற்படவில்லை என்றாலும், தாவா சொத்து எனக்கு ஒதுக்கப்படவில்லை என்றாலும் சரியல்ல. புல வரைப்படத்தில் 5 1/2 செண்ட் ஒரு பாகமாகவும், 5 1/2 மற்றொரு பாகமாக பிரிக்கப்பட்டது குறிப்பிடப்படவில்லை என்றாலும் சரிதான். கடந்த 2017 ல் எனது வீட்டிற்கும் சேர்த்து பிரதிவாதி லோன் எடுத்துவிட்டார். அந்த லோனை

பிரதிவாதி செலுத்திவிட்டார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. மீண்டும் பிரதிவாதி ஸ்ரூரல் மகேந்திர பைனான்ஸில் லோன் பெற்றுள்ளார்.

என்னால் அந்த பைனான்சிற்கு அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் சரிதான். சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கில் ரூரல் மகேந்திரா பைனான்சில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள சமயத்தில் பிரதிவாதியின் பெரிய மகன் ஊரில் இருந்தார். சிறிய மகன் சென்னையில் வேலை பார்த்து வந்தார். நான் வழக்கு தாக்கல் செய்த காலத்தில் மணிகண்டம், ரெகுநாதன்தான் தாவா சொத்திற்கு உரிமையாளர்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதி, நானும்தான் தாவா சொத்திற்கு உரிமையாளர் ஆவோம். கூட்டு உரிமையாளருக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை கோரமுடியாது என்றால் சரிதான். நான் நடுவில் வேலி வைத்து திருப்பி தரவேண்டும் என்றும், பிரச்சனை செய்யக்கூடாது என சொல்லி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நானும், பிரதிவாதியும் தாவா சொத்தமிற்கு கூட்டு உரிமையாளர்கள் அல்ல என்றாலும், பிரதிவாதிக்கு உண்டான அனுபவத்தின் அடிப்படையில் அவருக்கு பட்டா வழங்கப்பட்டது என்றாலும் சரியல்ல.

1972 ல் எனது மாமனார் விஸ்வராயர் பெயரில்தான் பட்டா வழங்கப்பட்டது. 1990 ல் பிரதிவாதி அவரது பெயரை மட்டும் கொடுத்து பட்டா பெற்றுள்ளார். 1990 லேயே எனது கணவருக்கும் பிரதிவாதிக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டது. எனது கணவரோ எனது கணவர் இறப்பிற்கு நானோ பிரதிவாதியின் பெயரில் பட்டா வழங்கப்பட்டது குறித்து ஏதேனும் நடவடிக்கை எடுத்தோமா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. எனது கணவருக்குதான் தெரியும். தாவா சொத்தில் எனக்கு எவ்விதமான சட்ட உரிமையும் இல்லை என்பதால்தான் பிரதிவாதி மீது எவ்விதம் நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. திருமணத்திற்கு பிறகு எனது கணவரும், நானும் திருத்துறைப்பூண்டி, சென்னை , திருச்சி ஆகிய ஊர்களில் குடியிருந்து வந்தோம் என்றால் சரியல்ல. நான் தாவா இடத்தில்தான் குடியிருந்து வந்தோம். மேற்கண்ட ஊர்களில் எங்களுக்கு சொத்து உள்ளது என்றால் இல்லை. மன்னார்குடியில் இருந்து வந்தோமா என்றால் இல்லை. எனது மகன் சென்னையில் இருந்து வருகிறார்.

நான் தாவா சொத்தில் எந்த காலத்திலும் வசித்து வரவில்லை என்றாலும், சென்னையில்தான் வசித்து வருகிறேன் என்றாலும் சரியல்ல. வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள வழக்குமூலம் கற்பனையாக உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. 29.12.2012 ல் பஞ்சாயத்து பேசப்பட்டது என்றால் சரிதான். வெள்ளை பேப்பரில் எழுதி வாங்கினார்கள் அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கறிஞருக்குதான் தெரியும். கடந்த 29.12.2012 ல் பேசப்பட்ட பஞ்சாயத்து குறித்து வருவாய் கோட்டாட்சியர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலரிடம் சொல்லி உள்ளேன் . நான் சொல்வது போல கடந்த 29.12.2012 ல் பஞ்சாயத்து பேசப்பட்டு இருந்தால் அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு எவ்வித மான உரிமையும், அனுபவமும் இல்லை என்றால் சரியல்ல. எனது உரிமையில்லாத சொத்தை பொறுத்து உண்மையான உரிமையாளருக்கு எதிராக இவ்வழக்கை தாக்கல் செய்ய இயலாது என்றாலும் நான் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கானது தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல. தாவா சொத்தில் தற்போதைய உரிமையாளரை இவ்வழக்கில் சேர்க்காததால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

எனக்கும், எனது கணவருக்கும் நடந்த திருமணப்பத்திரிக்கையில் தாவா சொத்தின் முகவரி குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. கணவரின் இறப்புசான்றிதழில் வடக்கு தெரு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் பிரதிவாதிதான் தவறாக கொடுத்துள்ளார். மேற்கண்ட சங்கதிகளை எனது வாக்குமூலத்திலும், வழக்குரையிலும் சொல்லப்படவில்லை என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. நான் தெரியாது என வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தானது தெற்கு தெருவில் உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன். என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கானது சட்டப்பிழையானது என்பதால் தள்ளுபடி செய்யப்படுகிறது என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
DN: cn=A SEETHALAKSHMI, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2024.09.20 14:18:42 +0530

District Munsif

Mannargudi.